# 04-12-2024 செய்தி

## நகரமயமாக்கலின் சவால்கள்

- உலக மக்கள்தொகையில் 57.8% பேர் நகரப் பகுதியில் வசிப்பதாகவும் இந்த எண்ணிக்கை 2050 ஆம் ஆண்டுக்குள் இரட்டிப்பாகும் என்றும் யூத் கிளைமேட் சேஞ்ச்மேக்கர்ஸ் (Youth Climate Change Makers) அமைப்பு கணித்துள்ளது.
- இந்த நிலையில் நகரப் பகுதிகளில் தொடர்ந்து அதிகரிக்கும் மக்கள்தொகைப் பெருக்கத்தினால் பல்வேறு சவால்கள் உருவாகிவருகின்றன.
- இந்தப் போக்கு தொடர்ந்தால் வாழ்வதற்கான தகுதியைப் பெரும்பாலான நகரப் பகுதிகள் இழக்கும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

**அதிகரிக்கும் நகரமயமாக்கல்**

- உலகின் தெற்கு நாடுகளில் நகரமயமாக்கல் தீவிரமாகிவருகிறது. அதேநேரத்தில், அந்நாடுகளில் போதிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததாலும், வளங்கள் பற்றாக்குறையினாலும், அங்குள்ள நகரங்கள் நெருக்கடிகளைக் கடுமையாக எதிர்கொண்டு வருகின்றன. குறிப்பாக, நகரங்களில் நிலவும் இடப்பற்றாக்குறை முக்கியப் பிரச்சினையாக மாறியுள்ளது.
- காலநிலை மாற்ற விளைவினால் தீவிர மழை, பெருவெள்ளம், வெப்ப அலை போன்றவற்றால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.
- வரும் ஆண்டுகளில் இந்தியா, சீனா, நைஜீரியா போன்ற நாடுகளின் நகரங்களில் மக்கள்தொகை அதிகரிக்கும் எனத் தரவுகள் குறிப்பிடுவதால், அதை எதிர்கொள்வதற்கான திட்டங்கள் அவசியமாகின்றன.

**இந்திய நகரமயமாக்கல்**

- இந்திய நகரமயமாக்கல் பாதையானது வடபகுதி நாடுகளின் நகரமயமாக்கலிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டது. மேற்கத்திய நாடுகளில் தொழில் புரட்சியைத் தொடர்ந்து நகரமயமாக்கல் ஏற்பட்டது.
- அப்போது கிராமப்புறத் தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சும் வகையிலான வேலைவாய்ப்புகள் அதிக அளவில் உருவாகின.
- காலனித்துவ நாடுகளிலிருந்து சுரண்டப்பட்ட பொருளாதார வளத்தால் மேற்கத்திய நாடுகளின் நகரமயமாக்கல் நீடித்தது
- காலனித்துவ ஆட்சியின்போது பிரிட்டனின் பொருளாதாரத்துக்கு இந்தியா 45 டிரில்லியன் டாலர் பங்களிப்பு செய்ததாக இந்தியப் பொருளாதார நிபுணர் உத்சா பட்நாயக் குறிப்பிடுகிறார்.
- ஆனால், இந்திய நகரமயமாக்கலின் பின்னணியில் பொருளாதாரப் பிரச்சினைகளும் இருக்கின்றன. இதன் விளைவாக, நகரமயமாக்கலின் வளர்ச்சியில் வறுமையும் ஒன்றுசேர்ந்தே பயணித்து வருகின்றன.
- உதாரணத்துக்கு, கோவிட் காலத்தில் அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கத்தினால், நகரங்களில் வேலை இல்லாமல் மீண்டும் கிராமங்களை நோக்கி மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். இது இந்தியாவின் நகர்ப்புறத் திட்டமிடலில் உள்ள இடைவெளிகளைத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

**தீர்வு கோரும் பிரச்சினைகள்**

- இந்திய மக்கள்தொகையில் சுமார் 40% பேர் நகரப் புறங்களில் வசிப்பதாக உலக வங்கித் தரவு கூறுகிறது.
- மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் நகர்புற மக்கள்தொகை 2001இல் 27.6 சதவீதமாக இருந்தது.
- இது 2011இல் 31.16 சதவீதமாக உயர்ந்தது. இந்திய நகரங்கள், நிலையான வளர்ச்சி என்கிற இலக்கை நோக்கி முன்னேறிச் செல்கின்றன. அதேவேளையில், வறுமை, வேலையின்மை, சுற்றுச்சூழல் பாதிப்பு, சமூகப் பிளவுகள், சமத்துவமின்மை போன்றவற்றாலும் அவை பாதிக்கப்படுகின்றன.
- இந்தியாவில் கட்டிட விதிமுறைகள் முறையாக அமல்படுத்தப்படாததால் பெருநகரங்களில் இடநெருக்கடியும் அதிகரித்திருக்கிறது.

**காலாவதியான திட்டங்கள்**

- 1980களில் டெல்லி, சூரத், மும்பை போன்ற நகரங்களில் தொழில்துறைச் செயல்பாடுகள் குறைக்கப்பட்டன. இது தொழிலாளர்களின் வேலை இழப்புக்கு வழிவகுத்தது. இதனால், வேலை இழந்த தொழிலாளர்கள் புறநகர்ப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர்.
- இந்திய மக்கள்தொகையில் 41% பேர் குடிசைப் பகுதிகளில் வசித்துவருவது குறிப்பிடத்தக்கது.
- அத்துடன் பெரும்பாலான நகர்ப்புற வேலைகள் 90% அமைப்புசாராத் தொழில் சார்ந்தவையாக இருப்பதால், தொழிலாளர்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை எனவும் பொருளாதார அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.
- இரண்டாவது சுற்றுச்சூழல் பாதிப்பு, அதிகரிக்கும் மக்கள்தொகையினால் நகரங்களில் குடிநீர், காற்று மாசுபாடு போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.
- 2023இல் உலகில் மிக மோசமான காற்று மாசுபாடு நிலவும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 3ஆவது இடத்தில் உள்ளது எனக் காற்றின் தரத்தை மதிப்பீடு செய்யும் ஸ்விட்சர்லாந்தின் 'ஐக்யூஏர்' அமைப்பு தெரிவிக்கிறது.
- மிக மோசமாகக் காற்று மாசு நிலவும் உலகின் முதல் 50 நகரங்களில் இந்தியாவில் 42 நகரங்கள் இடம்பிடித்துள்ளது கவனிக்கத்தக்கது.

**தீர்வுகள்**

- 2050இல், இந்திய நகரப் பகுதிகளில் 80 கோடி மக்கள் வசிப்பார்கள் எனத் தரவுகள் கூறுகின்றன. அப்போது, காற்று மாசு போன்ற சுகாதார நெருக்கடிகள் மக்களின் ஆயுள்காலத்தைக் குறைக்கக்கூடும்.
- இதில், காற்று மாசு உருவாவதற்குக் காரணமாக இருக்காத ஏழை மக்களே அதிகம் பாதிக்கப்படுவர். இதைக் கட்டுப்படுத்த ரயில், பேருந்து போன்ற பொதுப்போக்குவரத்து வசதிகளை அதிகரித்து, விரைவில் மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும்.

- தீவிர வானிலை நிகழ்வுகளால் ஏற்படும் பெருவெள்ளத்தை எதிர்கொள்ள மேம்பட்ட கழிவுநீர் மேலாண்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.
- நகரங்களில் இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்குக் குடிநீர், சாலை, மின்விளக்கு, போக்குவரத்து, வேலைவாய்ப்பு முதலிய அனைத்து அடிப்படை வசதிகளையும் கிராமபுறங்களில் உருவாக்குவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.
- சீர்குலைந்துள்ள நகரமயமாக்கல் திட்டங்களுக்குப் புத்துயிர் அளித்து, வளர்ச்சி சார்ந்து நிரந்தரத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மிக முக்கியமாக திட்டமிடப்படாத வளர்ச்சி என்பது மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்பதுடன், பொருளாதாரத்தையும் பாதிக்கும் என்பதை மத்திய, மாநில அரசுகள் நினைவில் கொள்ள வேண்டும்.

## வங்கிகள் சட்டத்திருத்த மசோதா

- தற்போது வங்கிக் கணக்கு வைத்திருக்கும் ஒருவர், தனது நியமனதாரராக ஒருவரை மட்டுமே நியமிக்க முடியும். இதன்மூலம், வங்கிக் கணக்கு வைத்திருக்கும் நபர் உயிரிழந்தால், அவரின் கணக்கில் உள்ள பணத்தை நியமனதாரர் பெற முடியும்.
- இந்நிலையில், வங்கிகள் சட்டத்திருத்த மசோதவின்படி, வங்கிக் கணக்கு வைத்திருக்கும் ஒருவர், தனது நியமனதாரர்களாக 4 பேரை குறிப்பிடலாம்.
- வங்கித் துறையின் நிர்வாக தரநிலைகள், வங்கிகளில் பணம் செலுத்துவோர் மற்றும் முதலீட்டாளர்களின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துதல், பொதுத்துறை வங்கிகளின் இயக்குநர்கள் பதவிக்காலத்தை அதிகரித்தல் உள்ளிட்டவை இந்த மசோதாவின் நோக்கம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**கூட்டுறவு இயக்குநர்கள் பதவிக்காலம்:**

- கூட்டுறவு வங்கிகளின் இயக்குநர்கள் (தலைவர் மற்றும் முழுநேர இயக்குநர் தவிர) பதவிக்காலத்தை 8 ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகளாக அதிகரிக்க மசோதாவில் முன் மொழியப்பட்டுள்ளது.
- மாநில கூட்டுறவு வங்கி வாரியத்தில் மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநரும் கடமையாற்ற இந்த மசோதா அனுமதிக்கிறது.

**மொத்தம் 19 திருத்தங்கள்:**

- இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934, வங்கி ஒழுங்காற்றுச் சட்டம் 1949, பாரத ஸ்டேட் வங்கிச் சட்டம் 1955, வங்கி நிறுவனங்கள் (கையகப்படுத்துதல் மற்றும் பரிமாற்றம் சட்டம் 1970, வங்கி நிறுவனங்கள் (கையகப்படுத்துதல் மற்றும் பரிமாற்றம்) சட்டம் 1980 ஆகியவற்றில் மாற்றங்களைக் கொண்டுவர, மொத்தம் 19 திருத்தங்கள் மசோதாவில் முன்மொழியப்பட்டுள்ளன.

**பங்கை 26% ஆக குறைப்பதே நோக்கம்:**

- பொதுத்துறை வங்கிகளில் மத்திய அரசின் பங்கை 51 சதவீதத்தில் இருந்து 26 சதவீதமாக குறைத்து, அந்த வங்கிகளை தனியார்மயமாக்குவதே மசோதாவின் உண்மையான நோக்கம் என்றார்.

## புதிய குற்றவியல் சட்டங்கள் சண்டிகரில் 100% அமல்

- நம் நாட்டில் இந்தியத் தண்டனைச் சட்டம் (ஐபிசி), இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (சிஆர்பிசி), இந்திய சாட்சி சட்டம் (ஐஇஏ) ஆகிய சட்டங்கள் அமலில் இருந்தன.
- இவற்றுக்கு மாற்றாக முறையே, பாரதிய நியாய சன்ஹிதா (பிஎன்எஸ்), பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (பிஎன்எஸ்எஸ்) மற்றும் பாரதிய சாட்சிய அதினியம் (பிஎஸ்பி) ஆகிய புதிய குற்றவியல் சட்டங்கள் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டன.
- இதில் இணையவழி குற்றம், திட்டமிட்ட குற்றம் உள்ளிட்ட நவீன கால சவால்களுக்கு தீர்வு காணும் வகையில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
- இந்த சட்டங்கள் 2024 ஆம் ஆண்டு ஜூலை 1-ம் தேதி நாடு முழுவதும் அமலுக்கு வந்தன.
- இந்நிலையில், நாட்டிலேயே இந்த 3 புதிய சட்டங்களையும் 100% அமல்படுத்திய நிர்வாகம் என்ற பெருமை சண்டிகருக்கு கிடைத்துள்ளது.

## நிதிக்குழு தமிழகத்துக்கு நியாயம் வழங்குமா?

**எப்படி நடக்கிறது நிதிப் பகிர்வு ?**

- மாறாக, மாநிலங்களுக்கு வரி வருவாயில் மூன்றில் ஒரு பங்கே கிடைக்கிறது.
- இப்போது, மத்திய அரசுதான் மூன்றில் இரண்டு பங்கு வரிகளை வசூலிக்கிறது. ஆனால், மூன்றில் ஒரு பங்கு செலவினங்கள்தான் அதன் கீழ் வருகின்றன. (பாதுகாப்பு, அயலுறவு, பேரிடர் நிவாரணம் முதலியன)
- ஆனால், அவை மூன்றில் இரண்டு பங்கு செலவினங்களை (சுகாதாரம், கல்வி, சமூகநலம், உள்கட்டமைப்பு, வேளாண்மை, வட்டி முதலியன) எதிர்கொள்கின்றன.
- இந்தக் கூடுதல் செலவினங்களை எதிர்கொள்ள, மாநிலங்களிலிருந்து பெற்ற வரி வருவாயில் ஒரு பங்கை மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்குகிறது.
- இந்தப் பங்கை நிர்ணயிப்பதுதான் நிதிக் குழுவின் பணி. நமது அரசமைப்புச் சட்டத்தின் 280 ஆவது பிரிவின்படி, ஐந்தாண்டுக்கு ஒரு முறை நிதிக்குழு நிறுவப்பட வேண்டும். 15ஆவது நிதிக் குழு (2021-26) நிர்ணயித்த படியே இப்போதைய வரி வருவாய் பகிரப்படுகிறது.
- 16ஆவது நிதிக் குழு, 2026-31 காலக்கட்டத்துக்கான நிதிப் பகிர்வை நிர்ணயிக்கும். இந்தக் குழு தனது அறிக்கையை அடுத்த ஆண்டு அக்டோபரில் சமர்ப்பிக்கும்.

**முதற் கட்டப் பகிர்வு**

- நிதிப் பகிர்வின் முதல் கட்டம், வரி வருவாயில் எத்தனை சதவீதம் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று நிர்ணயிப்பது.

- இதற்குச் செங்குத்துப் பகிர்வு (Vertical devolution) என்று பெயர். 15ஆவது நிதிக்குழு மொத்த வரி வருவாயில் 41% மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று விதித்தது.

**8% நிதி எப்படிக் குறைந்தது?**

- மத்திய அரசு, மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்ளத் தேவையற்ற சில ”சிறப்பு வரிகள்” இருக்கின்றன. இவை “மேல் வரி” (cess), “கூடுதல் கட்டணம்” (surcharge) என்பன. கடந்த சில ஆண்டுகளாக வரி வருவாயின் கணிசமான பகுதியைச் சிறப்பு வரிகளின் கீழ் கொண்டு வந்துவிட்டது மத்திய அரசு.
- 2012இல் 10% ஆக இருந்த சிறப்பு வரிகள், 2019க்குப் பிறகு 20% வரை உயர்ந்துவிட்டன. இதனால் மாநிலங்களிடையே பகிர்ந்துகொள்ள வேண்டிய நிதி குறைந்தது. மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீடும் குறைந்தது.
- இப்போதுள்ள 41% வரிப் பகிர்வை 50%ஆக உயர்த்த வேண்டும் என்பது தமிழக அரசின் கோரிக்கைகளில் முதன்மையானது. பல மாநில அரசுகள் இதே கோரிக்கையை முன்வைத்த போதும் தமிழக அரசுதான் இதைக் காரண காரியங்களோடு வாதிட்டது என்று பாராட்டினார் நிதிக் குழுவின் தலைவர் டாக்டர் அரவிந்த் பனகரியா.

**இரண்டாம் கட்டப் பகிர்வு**

- நிதிப் பகிர்வின் இரண்டாம் கட்டமாக ஒவ்வொரு மாநிலத்துக்கும் எவ்வளவுநிதி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையம் பரிந்துரைக்கும். இதற்குக் கிடக்கைப் பகிர்வு (Horizontal Devolution) என்றுபெயர்.
- இதற்கான அடிப்படையாக, 6 ஆவது நிதிக் குழு (1974-79) முதல் 14ஆவது நிதிக் குழு (2015-20) வரை, 1971ஆம் ஆண்டின் மக்கள் தொகையே கணக்கில் கொள்ளப்பட்டது.
- மக்கள்தொகைக் கட்டுப்பாடு ஒரு தேசியக் கொள்கையாக முன்னெடுக்கப்பட்ட 1970க்குப் பிறகு, மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்கள், குறிப்பாகத் தென் மாநிலங்கள், பாதிக்கப்படாமல் இருப்பதற்காகவே இந்த ஏற்பாடு.
- ஆனால், 15ஆவது நிதிக் குழு (2021-26), மத்திய அரசின் அறிவுறுத்தலின் (Terms of Reference-ToR) பேரில் 2011 மக்கள் தொகையை அடிப்படையாக எடுத் துக்கொண்டது.
- இது தென் மாநிலங்களின் மீது பேரிடியாக இறங்கியது. அவை பெருங் குரலெடுத்து முறையிட்டன. அப்போது, மக்கள் தொகையைப் போலவே மக்கள்தொகைக் கட்டுப்பாடும் கணக்கில் கொள்ளப்படும் என்று நிதிக் குழு வாக்குறுதி நல்கியது. ஆனால் நடந்தது வேறு.

**15ஆவது நிதிக் குழு, நிதிப் பகிர்வுக்காகப் பின்வரும் ஆறு அம்சங்களைக் கணக்கில் கொண்டது.**

1. மாநிலங்களின் மக்கள்தொகை 15%;
2. மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவதில் மாநிலங்களின் செயல்பாடு - 12.5%;
3. வருமான இடைவெளி (Income Distance) 45%;
4. வனம், சுற்றுச்சூழல் - 10%;
5. வரி வசூலில் மாநிலங்களின் திறன் 2.5%
6. மாநிலங்களின் பரப்பு - 15%

- இதன்படி முதல் அம்சம், மக்கள்தொகை அதிகம் உள்ள மாநிலங்களுக்கு சாதகமானது. இரண்டாம் அம்சத்தில் தென் மாநிலங்களுக்குக் கூடுதல் புள்ளிகள் கிட்டி யிருக்க வேண்டும்.
- ஆனால், அப்படி நடக்க வில்லை. இதைக் கணக்கிடும் சூத்திரத்தில் 2011 மக்கள்தொகையைப் பயன்படுத்தியது நிதிக்குழு, விளைவு? மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய தமிழகத்துக்கு 10 புள்ளிகளும், கட்டுப்படுத்தாத உத்திரப் பிரதேசத்துக்கு 12.5 புள்ளிகளும் கிடைத்தன. மூன்றாவது அம்சம், வருமான இடைவெளி. இது வருவாய் குறைவான மாநிலங்களுக்குக் கூடுதல் நிதி வழங்குவதற்காக ஏற்படுத்தப் பட்டது.
- இந்த அம்சத்தைக் கணக்கிடும் சூத்திரத்திலும் 2011 மக்கள்தொகையைப் புகுத்தியது நிதிக் குழு. விளைவாக, உத்தரப் பிரதேசம் 27 புள்ளிகளையும் தமிழகம் வெறும் 2 புள்ளிகளையும் பெற்றன.
- இப்படியாக, முதல் மூன்று அம்சங்களும் (72.5% ஒதுக்கீடு) மக்கள்தொகை அதிகமுள்ள, அவற்றைக் கட்டுப்படுத்தாத மாநிலங்களுக்குச் சாதகமாக அமைந்தன. கடைசி மூன்று அம்சங்களும் அதிகப் பரப்பும் அதிக வனங்களும் உள்ள மாநிலங்களுக்கு மட்டுமே சாதகமாக அமைந்தன.
- மேற்படி பங்கீட்டின்படி ஐந்து தென் மாநிலங்களுக்கும் சேர்த்து 13.7% நிதியை ஒதுக்கிய 15ஆவது நிதிக் குழு, உத்தரப் பிரதேசம் என்னும் ஒரு மாநிலத்துக்கு மட்டும் 17.94% நிதியை ஒதுக்கியது.

**சமச்சீர் பரிந்துரை**

- தமிழக அரசு, தனது கோரிக்கையில் தமிழகத்தோடு வேறு எந்த மாநிலத்தையும் ஒப்பிட்டு நிதிப் பகிர்வில் உள்ள ஏற்றத் தாழ்வை எடுத்துக்காட்டவில்லை.
- மாறாக, 9ஆவது நிதிக் குழு தமிழகத்துக்குப் பரிந்துரைத்த 8% பங்கீடு, படிப்படியாகக் குறைந்து, 15ஆவது நிதிக் குழுவில் 4%ஆக வீழ்ந்துவிட்டதைச் சுட்டிக்காட்டியது.
- ஆகவே, 2011க்குப் பதிலாக மீண்டும் 1971 மக்கள்தொகையைக் கணக்கில் கொள்ள வேண்டும் என்றும் அதன் நியாயங்களையும் வற்புறுத்தியது. கூடவே, வரிப் பகிர்வினை முறைப்படுத்த சமச்சீரான அணுகுமுறை தேவை என்றும் வலியுறுத்தியது.
- அதற்காகப் பின்வரும் ஐந்து அம்சங்கள் அடங்கிய பகிர்வினை முன்மொழிந்தது:

1. மாநிலங்களின் மக்கள்தொகை (1971) -20%;
2. மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவதில் மாநிலங்களின் செயல்பாடு - 20%;
3. வருமான இடைவெளி - 35%;
4. நாட்டின் பொருளா தாரத்துக்கு மாநிலத்தின் பங்களிப்பு 15%;
5. நகரமயம் -10%